தமிழகத்தின் சில பகுதிகளில் வழக்கறிஞர்களும், வழக்கறிஞர் சங்கங்களும் மதுரையில் உயர்நீதிமன்றத்தின் பெஞ்ச் அமைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைச் சுட்டிக்காட்டியும், விரைவில் அதை அமைக்கவேண்டுமென்று வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் செய்வதோடு போராட்டமும் நடத்தி வருகின்றார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில் 1972-ஆம் ஆண்டே மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்சை அமைப்பதற்குக் கொள்கை முடிவெடுத்து, அன்றிலிருந்து இன்றுவரை எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், மதுரையில் பெஞ்ச் அமைப்பதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

3. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. செல்வராஜ், பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994-95-ஆம் ஆண்டிற்கான பொதுக்கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தொன்றாவது மற்றும் நூற்று ஐம்பத்திரண்டாவது அறிக்கைகளை, பொதுக்கணக்குக் குழுவின் சார்பாக, பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்).

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு. அறிமுகம் செய்தல்.

1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

1995 மார்ச் 17]

முற்பகல் 11–20

***மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர்ச்சி. திரு. பரிதி இளம்வழுதி தனது விவாதத்தைத் தொடரலாம். நேற்றே நீங்கள் ரொம்ப நேரம் பேசிவிட்டீர்கள். இன்று 10 நிமிடத்தில் நீங்கள் உரையை முடித்து விடலாம்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் தங்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இடைவேளைக்குப் பிறகு திரைப்படம் தொடருவதுபோல, நேற்று விட்ட இடத்திலிருந்து என்னுடைய